
புதிய உலகை நோக்கி புதிய குடும்பங்கள்






எட்வின் எம். ஜாண்

அக்கம்பக்கமயமாதல், கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் - 1

புதிய உலகு நோக்கிய புதிய குடும்பங்கள்



பணி. எட்வின் எம். ஜாண்

வெளியீடு

வெளிச்சம் டிரஸ்ட்,

9, அமீர் ஜாண் தெரு,

நுங்கம்பாக்கம்

சென்னை - 94

Published by	:	Velicham Trust, No:9, Ameer John Street, Nungambakkam, Chennai - 94
Book size	:	Cr 1/8
Page	:	32
Paper	:	18.6 kg Maplitho
Printed at	:	Nanjil Offset Printers 67/1, Court Road, Nagercoil ✆ : 233853
Cover design	:	Leo Roy
Contribution	:	Rs. 40

முன்னுரை

கிறிஸ்தவம் தொடங்கியது, ஒரு புரட்சி இயக்கமாக.

அதுவும் மதங்களின் ஆதிக்க அடிமைத்தனத்தினின்றும், மக்ளை அடித்தமர்த்துகின்ற, ஒடுக்குகின்ற, மனநிலைகளிலிருந்தும் அமைப்பு முறைகளிலிருந்தும் விடுவிக்கும் ஓர் இயக்கமாக.

ஆனால் காலப்போக்கில் இதன் புரட்சித்தன்மை மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது, மறக்கப்பட்டிருக்கிறது.

வெறும் சம்பிரதாயச் சமயங்களுள் ஒன்றாக (அதும்) மாறிவிட்டிருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும். கிறிஸ்தவத் திருச்சபையின் அருட்சாதனங்கள் கூட புதியதோர் உலகிற்கு, சகோதரத்துவ உலகிற்கு, கட்டியம் கூறுகின்ற அடையாளக் கொண்டாட்டங்களாக, அர்ப்பணத் தூண்டுதல்களாக, அமைய வேண்டும்.

இதற்கு என்ன செய்வது? எப்படிச் செய்வது?

இவ்வகையில் திருமணத் தயாரிப்புகள் எப்படி இருக்க வேண்டும்?

இறையாட்சி என்று அடையாளப்படுத்தப்படும் புதுஉலகக் கனவுகளை உள்வாங்கி குரல் கொடுக்கும் தளங்களாக குடும்பங்களை ஆக்குவது எப்படி?

அந்த இறையாட்சிக் கனவின் இன்றைய பரிமாணங்கள் என்னென்னவாக இருக்கும்?

இம் மாதிரிக் கேள்விகளை மையப்படுத்திய ஒரு தேடலை முன்வைக்கிறது இச் சிற்றேடு.

சலிப்பூட்டும் சித்தாந்த தொகுப்பாக இல்லாமல், ஓர் உரையாடல் இறையியலாக, கதையாடல் இறையியலாக, சுவைபடச் செல்கிறது, இதன் அணுகுமுறையும் நடையும்.

கிறிஸ்துவையும் அவரது இயக்கத்தையும் புரிந்துகொண்டு இன்றைய "அக்கம் பக்கத்துமயமாக்கல்" இயக்கத்தோடு தொடர்புபடுத்த இது பெரிதும் உதவும்.

திருமணத் தயாரிப்பு மறைக்கல்விக்கு இதனை ஒரு துணைநூலாகப் பயன்படுத்தலாம்.

மணமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கலாம்.

"வெளிச்சம்"

புதிய உலகு நோக்கிய புதிய குடும்பங்கள்

அருள்பணியாளர் இனியனிடம் திருமணத் தயாரிப்பு மறைக்கல்விக்காக வந்தான் இளைஞன் நவீனன். கலந்துரையாடல்கள் அவ்வளவு ஆழமாகவும் அகலமாகவும் அமையும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

அன்பும் தெய்வீகமும்

பணியாளர் இனியன் தொடங்கினார்: "கடவுள் என்றால் என்ன?" ஏதேதோ பதில்களைச் சொன்னார் நவீனன். பணியாளர் இனியனுக்கு திருப்தி வரவில்லை. இறுதியில் புனித யோவானின் கடிதத்தை நினைவுபடுத்திக் கேட்டார்.

நவீனன் சொன்னான். "அன்பே இறைவன்".

பணியாளர்: "மிக நல்லது. மிகப் பெரிய கட்டளை எது?"

நவீனன் : "அன்புக் கட்டளை".

பணியாளர்: "நல்லது. ஆன்மீகம் என்றால் என்ன?"

நவீனன் ஏதேதோ பதில் சொன்னார். இறுதியாக பணியாளர் இனியன் விளக்கினார்: "ஆன்மீகம் என்னும் போது தெய்வத்தன்மை அல்லது தெய்வீகத்தைக் குறிப்பிடுகிறோம். அன்பே தெய்வம் என்றால், தெய்வீகம், ஆன்மீகம் எல்லாம் அன்புத் தன்மையாகத் தானே இருக்க முடியும்?"

"ஆம்" என்று தலையாட்டினான் நவீனன்.

பணியாளர் தொடர்ந்து கேட்டார்: "சரி, அன்பு என்றால் என்ன?"

"நேசம்", "பாசம்" என்றவாறாக நவீனன் சொன்ன பதில்களைக் கேட்ட பிறகு பணியாளர் தொடர்ந்தார்: "அன்பு என்றால் இன்னது

என்று புனித யோவான் தன் கடிதத்தில் ஒரு வரையறையைத் தந்திருக்கிறர். அதைப் பார்ப்போமா? 1யோவான் 3:16 எடுங்கள் பார்ப்போம்"

நவீனன் வாசித்தான்: "கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னது என்று அறிந்து கொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்".

பணியாளர் தொடர்ந்து கேட்டார்: "அன்பு என்றால் என்னது?"

"உயிரைக் கொடுப்பது."

"யாருக்காக?"

"பிறருக்காக"

மனிதர்கள் இருவகை

பணியாளர் தொடர்ந்து விளக்கினார்: "மனிதர்கள் இருவகை: ஒரு வகையினர், உயிரைக் கொடுப்பவர்கள்; இன்னொரு வகையினர், உயிரை எடுப்பவர்கள்."

"ஒரு வகையினர், பிறர் வாழத் தங்களைத் தருபவர்கள் பிறர் மையமானவர்கள். இன்னொரு வகையினர், தங்களை மையப்படுத்துபவர்கள், தன்மையமாகச் செயல்படுபவர்கள், "தான்" "தான்" என்று நச்சரித்து உயிரை வாங்குபவர்கள்".

"ஒரு வகையினர், ஆறு போன்றவர்கள்; தனக்கென்றில்லாமல் எல்லாம் பிறருக்கு என்று ஈபவர்கள். இன்னொரு வகையினர், சாக்கடை போன்றவர்கள்; எல்லாம் வாங்கிக் கொள்வார்கள், எதையும் தரமாட்டார்கள். ஆறு மலர்ச்சியைத் தரும்; சாக்கடை தலைவலியைத் தரும்."

நவீனன் நன்றாகக் கவனிப்பதைக் கண்ட பணியாளருக்கு உற்சாகம் பெருகியது. அவர் தொடர்ந்து கேட்டார்: "உனக்கு நரகம் பார்க்க வேண்டுமா? மிக எளிது. இரண்டு தன்னலவாதிகளைச் சேர்த்து வாழ வைத்தால் போதும், அங்கே நரகம் வந்துவிடும். அதேபோல உனக்கு மோட்சம் பார்க்க வேண்டுமா? அதுவும் எளிது. இரண்டு பிறர்மையவாதிகளை, அதாவது கிறிஸ்துவைப் போன்ற "பிறருக்கான மனிதர்களை", சேர்ந்து வாழ வைத்தால் போதும், அங்கே மோட்சம் வந்துவிடும்."

"உன் மணவாழ்வு மோட்சம் போல் இருக்க வேண்டும் என்று நாங்கள் வாழ்த்த வேண்டாமா? மகிழ்ச்சியாக அமைய வேண்டாமா? உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெற வேண்டாமா? இதற்கு இயேசு இப்படித்தான் வழி சொல்கிறார்."

"எப்படி?"

"யோவான் நற்செய்தி 15-ஆம் தலைப்பில் பார்ப்போமா? 11-ஆம் வசனம் தொடங்கி".

நவீனன் வாசித்தான் : "என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன். நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை".

இனியன் : "ஆக, முறையான திருமணத் தயாரிப்பு என்றால்?"

நவீனன் : "தனக்கென்று இல்லாமல், தன்னை விட்டு, பிறர் மையமாக வாழக் கற்றுக்கொள்வது".

இனியன் : "மிக சரி. ஆமாம், நீ என்ன படித்திருக்கிறாய்?"

நவீனன் : "பி.ஏ."

இனியன் :"அண்மைக் காலத்தில் சில திருமணங்களைப் பார்க்கிறேன். எம்.ஏ., எம்.ஃபில், பி.எச்.டி. என்றெல்லாம் முடித்து விடுகிறார்கள். திருமண வாழ்விலோ தோற்று விடுகிறார்கள். வாழ்க்கைக் கல்வி என்று வரும்போது ஃபெயில் மார்க். நான் பெரிசா நீ பெரிசா, என் குடும்பமா, உன் குடும்பமா, நான் வெற்றியா நீ வெற்றியா, நான் முந்தியா நீ முந்தியா என்பதாக முடிந்துவிடுகிறது. வாழ்க்கை கனக்கத் தொடங்குகிறது. கசக்கிறது. இறுதியில் வெடிக்கிறது. தன்னலவாதி எவனும் உண்மையிலே வெல்வதில்லை. உண்மையான நிறைவு, ஆழமான மகிழ்ச்சி அவனிடம் இருப்பது இல்லை.

நவீனனுக்கு தலை குழம்பியது. அவன் கேட்டான்: "நான் ஏதோ 'சிம்பிளா' மந்திர பாடம் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியா கல்யாணம் பண்ணலாம்னு பார்த்தா நீங்க பெரிய குண்டைத் தூக்கிப் போடுறீங்க. துறவியாகவே மாறச் சொல்றீங்க. நாங்க என்ன பழைய காலத்துத் துறவிகளைப் போல, காட்டுக்கா போய்த் தவம் செய்ய முடியும்? நீங்க குருக்களும்தான் பத்து வருஷம் பதிமூன்று வருஷம்னு படிக்கிறீங்க. எல்லோரும் தன்னல மற்றவர்களாகத்தான் இருக்கிறீங்கண்ணு சொல்ல முடியுமா?

நவீனன் பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்துகொண்டது, பணி. இனியனுக்கு பிடித்திருந்தது. அவர் தொடர்ந்தார்: "சொல்லப் போனால், திருமண வாழ்வாக இருப்பினும் சரி, துறவற வாழ்வாக இருப்பினும் சரி, தேவையான பயிற்சி ஒன்றுதான்"

நவீனன் கொஞ்சம் சிரித்துக் கொண்டு ஒரு ஜோக் போல கேட்டான்.

“அப்போ, நாங்களும் பத்து ஆண்டு குருமடத்திலே படிக்கணும்னு சொல்றீங்களா?”

பணியாளர் இனியன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்: “இல்லை வாழ்நாள் பூராவும்”.

“அடடா, அது எப்படி?” இன்னும் சிரித்துக்கொண்டே கேட்டான். நவீனன்.

பணி. இனியன் சொன்னார்: “நீ ஒரு பங்கில் இருக்கிறாய் அல்லவா? அத்துடன் அன்பியத்திலும் இருக்கிறாய்? இவையெல்லாம் நமக்குத் தரப்படுகிற பயிற்சித் தளங்கள்”.

“அப்படியென்றால் பங்கும் அன்பியமும் ஒவ்வொரு குருமடம் என்கிறீங்க”.

“ஆம், இவை பொதுநிலையினருக்கான குருமடங்கள்”.

இந்த நேரம் பக்கத்துப் பங்குப் பணியாளர் வெற்றியோன் வந்தார். அவர் காதில் இந்த வார்த்தைகள் விழுந்துவிட, “என்ன, பொதுநிலையினர் குருமடம் என்கிறீர். ஏதோ சுவையான விவாதம் போலிருக்கிறதே?” என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

இனியன். “ஒன்றுமில்லை, தம்பி திருமணத் தயாரிப்புக்கு வந்தார். நீங்களும் வந்து கூட உட்காருங்களேன்”.

பணி.இனியன் பேசும் தொடர்ச்சியை அறிமுகப்படுத்தினார்: “பங்குகளும் அன்பியங்களும் பொதுநிலையினருக்கான குருமடங்கள்.”

பணி. வெற்றியோன் : “அதாவது பங்குப் பணியாளர் குருமட அதிபர். மிக்க நல்லது.”

இனியன் : “அப்படியென்றால் இங்கேயும் கிறிஸ்துவைப் போன்று பிறருக்கான மனிதர்கள், Men for others, என்று வாழ்வதற்கான பயிற்சிகள் அளிப்பது முந்தமுந்த பணியாளர் கடமையாக மாறவேண்டும்.

நவீனன் : “ஓ அப்படிண்ணா மறைக்கல்வி வகுப்புகள், விவிலிய வகுப்புகள் இப்படீண்ணு நெறய நடத்துறதுக்குச் சொல்றீங்க. பக்த சபை கூட்டங்களையும் சொல்லு வீங்களா? அதுபோல அன்பியக் கூட்டங்களும்....”

பணி. வெற்றியோன் : “சுவாமி ஒரு பங்குப் பணியாளருக்கு இருக்கிற வேலையிலே இதெல்லாம் எப்படிச் செய்வது? பங்கிலே தலைப்பங்கு. இணைப்பங்கு என்று திருவிழாக் களுக்குத் தயாரித்து நடத்துகிறதிலேயே நேரம் போய்விடுகிறது.”

பணி. இனியன் : “தம்பி நவீனன், உங்களுக்கு அவசரம் இல்லை என்றால், இந்த விவாதத்தையும் இணைத்துக் கொள்ளலாமா?”

நவீனன் : “தாராளமாக, எனக்கு இந்த விவாதம் பிடிச்சிருக்கு.”

பிறருக்கான மனிதர்கள்

பணி. இனியன் : “சுவாமி, எல்லாப் பணிகளும் இருக்கிறது என்று, மிக முக்கியமான பணியை விட்டுவிடக் கூடாது அல்லவா? பணியாளர்களுக்கு முந்தமுந்த அளிக்கப்படுகிற பணி, எல்லாவற்றையும் சீடராக்குவது. அவர் பெயரால் தன்னை மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு அவர் பின்னே சென்று இறையாட்சிக்காக உழைக்கின்ற அர்ப்பணங்களை,

தலைமைகளை, உருவாக்குவது. நம்மிடத்திலே நாளைக்கு அவர், 'நீ எத்தனை விழாக்களை நடத்தினாய், எத்தனை கட்டிடங்களைக் கட்டினாய்' என்ற கேட்கப் போவதில்லை. மாறாக, எத்தனை சீடர்களை உருவாக்கினாய் என்றுதான் கேட்பார். ஆதிகாலத் திருச்சபையைப் பாருங்கள், அவர்கள் எல்லா வேலைகளையும் தங்கள் மேல் இழுத்துப் போடுவதைத் தவிர்த்திருக்கிறார்கள். பொறுப்புகள் அதிகமான போது பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுத்து, 'நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறையல்ல' என்று, எது எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அது அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

புனித பவுல் அடியார் திருமுழுக்கு அளிக்கும் வேலையைக் கூட பிறரிடம் கொடுத்துவிட்டு இறைவார்த்தைப் பணிக்கு, சீடர்களை உருவாக்கும் பணிக்கு, முக்கியத்துவம் கொடுக்கிறார்".

நவீனன் : "சீடர்களை உருவாக்குவதுண்ணா, தன்னலமற்ற மனுஷங்களை, பிறர்மையமானவர்களை, உருவாக்குவது என்கிறீங்க".

பணி. இனியன் : "நல்லது"

பணி. வெற்றியோன் : "இனியன், மறைக்கல்வி, கருத்தரங்கு இதெல்லாம் தன்னலமற்ற பிறருக்கான மனிதர்களை உருவாக்கிட முடியுமா? இந்த மாதிரி எத்தனையோ பயிற்சிகளில் கலந்துகொண்டவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்குள்ளேயே எவ்வளவோ தன்னலம். ஆன்மீகத் தன்னலம் வேறே".

பணி. இனியன் : "மிகச் சரி. இந்த மாதிரிப் பயிற்சிகளைக் கொண்டு மட்டும் தன்னலமற்ற மனிதர்களை உருவாக்கிட

முடியாது. இன்னும் இந்தப் பயிற்சிகள் எப்படி நடத்தப்படுகிறது என்பதுவும் முக்கியம். வெறும் அறிவு ரீதியான மனப்பாடங்கள் நிறைவான மனப்பக்குவங்களை உருவாக்குவதில்லை. அதற்கு உணர்வு ரீதியான, அனுபவ ரீதியான அணுகுமுறைகளும் தேவை".

நவீனன் "அந்தப் 'பாயின்ட்'ட கொஞ்சம் விளக்குங்களேன்".

உணர்வு ரீதியாக, அனுபவ ரீதியாக

பணி இனியன் : "ஒரு சின்ன அம்சத்தோடு தொடங்குகிறேன். அக்கம் பக்கத்துக் குழந்தைகள் பாராளுமன்றங்கள் நடத்தும் சில இடங்களில் குழந்தைகளை, அதாவது 18 வயதுக்குக் கீழ்ப்பட்டோரை, சில நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ளவர்களோடு உரையாடச் செய்கிறார்கள். நாள் முழுவதும் அங்கே அவர்களோடு உறவாடச் சொல்லுகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் இல்லங்கள், மற்றும் அன்னை தெரசா ஆதரவற்றோர் இல்லங்களில், இந்த அனுபவம் எந்த அளவு மிகப் பலரிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றால், சிலர் பிறருக்காக வாழ்க்கையை அர்ப்பணிக்க உந்துதல் பெறுகிறார்கள். எடுத்துக்காட்டாக ஓர் இந்து இளைஞி இப்படி ஒரு மனவளர்ச்சி குன்றியோர் நிலையத்துக்கு ஒரு குழுவோடு காலையில் சென்று மாலையில் திரும்பினாள். வந்ததும் சொன்னாள்: 'திருமணம் பண்ணாமல் இவர்களுக்குப் பணி செய்வதிலேயே வாழ்க்கையைச் செலவிட்டு விடலாம் என்று தோன்றுகிறது'.

"இதேபோல், சில இயக்கங்களில் பயிற்சியின் அம்சமாக மிகமிக ஏழைகளான மனிதர்களோடு தங்கியிருந்து அவர்களுக்குச் செலவிட முடிகிற அளவுக்குக் காசிலேயே வாழ்ந்து பாருங்கள் என்று அனுப்புகிறார்கள். மிகப்பெரிய மனத்தாக்கங்களை, ஆக்கரீதியான மனநிலைகளை, இது உருவாக்குகிறது. மிக மேலோட்டமாக மினுக்குத்தனமாக

வாழ்ந்தவர்கள் ஆழ்ந்த பரிமாணங்களை இதனால் பெற்றிருக்கிறார்கள்."

நவீனன் : "இந்த மாதிரியெல்லாம் ஒவ்வொரு பகிர்விலும் அன்பியத்திலும் திட்டமிட்டு அனுபவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்கிறீங்க".

பணி இனியன் : "இதைவிட ஆழமான அனுபவப் பயிற்சி ஒன்று வேண்டும், அதாவது நிறைவு அனுபவப் பயிற்சி, மகிழ்ச்சி அனுபவப் பயிற்சி".

நவீனன் : "அது எப்படி?"

பணி. இனியன் : கொஞ்சம் யோசித்தார். பிறகு கேட்டார்:

"பல்வலி வந்தால் யாரை நினைப்பாய்?"

"டாக்டரை".

"அதற்கு முன்னால்?"

"அம்மாவை".

"அதற்கு முன்னால்?"

"கடவுளை".

"எதுவும் சரியான பதில் இல்லை".

"பிறகு?"

"வலி என்று வரும்போது, ஒவ்வொருவனும் முந்தமுந்த நினைப்பது தன்னைத்தான்".

"தான், தனது வலி. மீதி உள்ளவர்களை, மீதி காரியங்களையெல்லாம் தனது தன்மையக் கரிசனைக்குப் பயன்படுத்தும் கருவிகளாக. எந்த அளவுக்கு வலி

உக்கிரமமாகிறதோ அந்த அளவுக்கு ஒரு தன்மையவெறியே உருவாகி விடுகிறது".

பணி வெற்றியோன் : "அதாவது, அழுது கொட்ட வாய்ப்பு இருக்க வேண்டும் என்கிறீர்கள்".

பணி. இனியன் : "ஆமாம், அதுவும் முக்கியம். அதாவது, கவுன்சிலிங் போன்ற முயற்சிகள்".

நவீனன் : "அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்"

பணி. இனியன் : "கவுன்சிலிங் என்றால் மிக மிக முக்கிய மேதைகள் தான் செய்ய முடியும் என்று இல்லை. எல்லோருமே செய்யலாம். படிக்காதவர்கள் கூட, குழந்தைகள் கூட.

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பாதிப்புகள், இதனால் ஏற்படும் வெவ்வேறு வகையான உணர்ச்சிக் கொந்தளிப்புகள். இவற்றை அழுது கொட்டி அல்லது சிரித்துக் கொட்டி இப்படி ஏதாவது வகைகளில் வெளியே கொட்டித் தீர்த்துவிட்டோம் என்றால், மனம் தூய்மையாகிறது. கொட்டாமல் அமுக்கி விட்டோம் என்றால், நமக்குள்ளேயே குமுறுகிறோம், குழம்புகிறோம், வெவ்வேறு குளறுபடிகளுக்கு உள்ளாகிறோம்.

எடுத்துக்காட்டாக, ஒருவன் 'குட்மார்னிங்' சொல்லுகிறான் என்று வைத்துக்கொள்வோம். என் மனம் தெளிவாக இருந்தால் மகிழ்ச்சியாக 'குட்மார்னிங்' சொல்கிறேன். என் மனதுக்குள்ளே குளறுபடியென்றால், குமுறல் என்றால், பதில் வித்தியாசமாக வரும்: 'ஓங்கப்பன் குட்மார்னிங்'.

நவீனன் : "எல்லோரும் 'கவுன்சிலிங் செய்யலாம்னு சொன்னீங்க".

பணி. இனியன் : 'கவுன்சிலிங்' என்றால், காது கொடுத்துக் கேட்பது, ஆதரவான ஒரு பிரசன்னத்தைக் தருவது.

நவீனன் : "அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன்".

பணி. இனியன் : "ஒரு குழந்தையை எடுத்துக் கொள்ளுங்கள். கீழே விழுந்து அடிபடுகிறது. என்ன செய்யும்? சுற்றும் முற்றும் பார்க்கும். பக்கத்தில் யாரும் இல்லையென்றால் கொஞ்சம் துடைத்துக் கொண்டு அப்படியே சென்று விடும். வழியில் அம்மா தென்பட்டால் உரக்க அழும். மீதியுள்ளவர்கள் சொல்வார்கள், 'இது பொய் அழுகை' என்று. நிலைமை அப்படி அல்ல. குழந்தைக்கு அழுது கொட்ட ஆதரவான ஒரு பிரசன்னம் தேவைப்பட்டது.

"அதாவது பாதுகாப்பான ஒரு பிரசன்னம், அப்போது புரிந்துகொள்ளும் பிரசன்னம், நலம் நாடும் பிரசன்னம். அது கிடைக்காததால் அழ முடியவில்லை. தாய் வந்தவுடன் அது கிடைத்தது. ஆகவே அழுதது. இதனை அளிப்பது தான் 'கவுன்சிலிங். இதை அளிக்கும் போது நாம் குணப்படுத்துகிற ஒரு பிரசன்னமாக, விடுவிக்கிற ஒரு பிரசன்னமாக மாறுகிறோம்.

நவீனன் : "நடைமுறையில்?"

பணி. இனியன் : "ஒருவருக்கொருவர் காது கொடுத்துக் கேட்டாலே போதும். அதாவது தீர்ப்பிடாமல், கேள்விகள் கேட்காமல், இன்று இதற்கு ஆட்களும் இல்லை, நேரமும் இல்லை".

பணி. வெற்றியோன் : சில செபக் குழுக்களில் அழுகைக்கு நடுங்குவதற்கு என்றெல்லாம் இடம் கொடுக்கிறார்கள். அதற்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு....?

பணி. இனியன் : "நிச்சயமாக, இறைவனின் ஆதரவான பிரசன்னம் அனுபவப்பட, அப் பிரசன்னத்தில், மனதில்

உள்ளதைச் சொற்களாகவோ, அழுகையாகவோ இன்னும் இதுபோன்ற பிற வழிகளிலோ கொட்டும்போது, நாம் விடுதலை பெறுகிறோம். குணம் பெறுகிறோம். தெளிவு பெறுகிறோம்.

பணி. வெற்றியோன் : "இது தனி செபத்துக்கும் பொருந்தும் அல்லவா?"

பணி. இனியன்: "பொருந்தும். அது ஒரு வகையில் இறைவனோடு 'கவுன்சிலிங்'. சிலர் இரவில் படுக்கச் செல்லும்போது, அன்று காலையிலிருந்து நடந்த ஒவ்வொன்றையும் - மகிழ்ச்சி தந்தவற்றையும், வருத்தம் தந்தவற்றையும் - ஒரு நண்பனிடம் சொல்லுவது போல வாய்விட்டுச் சொல்லுகிறார்கள். இது அவர்களுக்கு விடுதலை அனுபவமாக, இறுக்கம் மற்றும் பதற்றம் நீக்கும் அனுபவமாக, மாறுகிறது. வாய்விட்டுத்தான் என்று அல்ல. அப்படி வாய்விட்டுச் சொல்லுவது, சிலருக்கு, மனதை நிலையாக ஒருமுகப்படுத்தும் வாய்ப்பாக அமைகிறது. இந்த ஆதரவுப் பிரசன்ன அனுபவத்தை மையப்படுத்தி, தொடர்ந்து மனதை ஒருமுகப்படுத்துதல் முக்கியம்".

பணி.வெற்றியோன் : "யாரோ சொன்னது போல, செபம் என்பது இறைப்பிரசன்னத்துக்கு நாம் பிரசன்னமாதல்".

பணி.இனியன் : "மிகப் பொருத்தம். ஆனால் இடையே நீங்கள் கேட்ட கேள்விகள், நான் சொல்ல வந்ததை கொஞ்சம் திசை திருப்பி விட்டது."

நவீனன் : "கொஞ்சம் தானே? சரி, இனி நீங்க சொல்ல வந்தது?"

பிரசன்னம் தரும் ஆற்றல்

பணி.இனியன் : "வேதனை நம்மைத் தன்மையமாகச் சிந்திக்க வைக்கிறது என்கிறோம். வேதனை என்றால் வெறும் வேதனை நிகழ்வுகள் மட்டுமல்ல. நிலைத்து நீடிக்கிற ஆழமான வேதனை அனுபவமும் உண்டு. அது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

நவீனன் : "கொஞ்சம் விளக்கமா....."

பணி.இனியன் கொஞ்சம் யோசிக்கிறார். பிறகு கேட்கிறார். "வயிறு எதற்காக இருக்கிறது?"

"உணவுக்காக"

"உணவு இல்லையென்றால்?"

"வயிறு பசிக்கிறது".

"அதாவது வயிறு வேதனிக்கிறது."

"ஆமாம்".

"கவிஞர் கலில் ஜிப்ரான் சொல்வது போல, பசி ஒருவனுக்கு மிக உக்கிரமமாகிறது என்றால் அவன் பிரணவத்தையும் சாப்பிடுவான். தாகம் உக்கிரமமானால், அவன் சாக்கடைத் தண்ணீரையும் குடிப்பான். அப்படிதானே".

"சரிதான்".

"ஆனால் ஒருவன் ஏற்கெனவே நிறைவாக இருந்தால் குவளையில் ஓர் ஈ விழுந்தால் கூட அதைத் தவிர்க்கப் பார்ப்பான்.

"மிகச் சரி"

“இது போல் தான் உள்ளமும், உள்ளம் எதற்காக இருக்கிறது?”

“உறவுக்காக”!

“மிகச் சரி. ஒவ்வொரு உள்ளமும் நிறைவான ஒரு புரிந்துகொள்ளுதலுக்காக, நிறைவான அங்கீகாரத்துக்காக, நிபந்தனையற்ற நிரந்தர உறவுப் பிடிப்புக்காக, ஏங்குகிறது.

ஆனால் அந்த உறவு கிடைக்காத போது, அந்த உறவுக்குத் தான் தகுதியில்லை என்று நினைக்கும்போது, மனம் தத்தளிக்கிறது. தடுமாறுகிறது. எதையாவது பற்றிப் பிடிக்கலாம் என்று பார்க்கிறது. எதைப் போட்டாவது நிரப்பலாம் என்று தவிக்கிறது.

இந்த வேதனை உக்கிரமமாக ஆக ஆக அவன் தன்மையமாகவே சிந்திக்கிறான். பிறரைப் பற்றிச் சிந்திக்க அவனுக்கு அவகாசம் இல்லை.

தன் கால் பதிந்திருக்கிற தளம் விலகி விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். நீந்தத் தெரியாத ஒருவன் தண்ணீரில் மூழ்குகிற நிலையென்று வைத்துக் கொள்வோம். யாருக்கு என்ன உதை, இடி என்று பார்க்காமலேயே கைகாலை வீசுவார்கள், உதறுவார்கள், புண்படுத்துவார்கள்.

ஆனால், உறவு அனுபவம், நிறைவாக இருந்தது என்றால் மகிழ்ச்சி அனுபவம் நிறைவாக இருக்கும். மகிழ்ச்சி தானாகப் பொங்கி வழியும்.

அன்பைப் பெற்றுக்கொண்டவனிடம் இருந்து அன்பு பிறரை நோக்கித் தானாக ஊற்றெடுக்கும். நிறைவான புன்னகை பிறரை நோக்கிப் பாயும்.

ஆனால் நிறைவான அன்பு அனுபவம், அங்கீகார அனுபவம், பிற உறவுகளில் கிடைப்பது இல்லை. ஆக எல்லோரும் ஏறக்குறைய புண்பட்ட நிலையில், வேதனை நிலையில், இருக்கிறோம்.

நிறைவான அங்கீகாரப் பிரசன்னம், அன்பு பிரசன்னம், நமக்குக் கிடைப்பது இறைவனிடமிருந்து,

அன்பே இறைவன் என்றோம். நிறைவாக நமக்கு நலம் வாழ்த்தி நிறைவாக நம்மைப் புரிந்துகொண்டு, நிறைவாக நம்மை மன்னித்து, நம்மை தாங்கிக் கொள்ளும் பிரசன்னம் இறைப்பிரசன்னம்.

இந்த இறையன்பு அனுபவமே நமக்குத் தேவை.

இந்த இறைவனை ஒரு ஈவு இரக்கமற்ற கொடுங்கோலராகக் காட்டி அஞ்ச வைத்த மத அணுகுமுறைகள் உண்டு. அவரை ஒரு கண்டிப்புத் தலையாசிரியராக, கடுகடு காவல்துறை கண்காணிப்பாளராக, வட்டிக்கடைக்காரராக, தற்புகழ்ச்சி விரும்பியாக, தன்னலமிக்க வியாபாரியாக சித்தரித்துக் காட்டுபவர்கள் உண்டு.

ஆனால் கிறிஸ்து காட்டிய கடவுள், ஓர் அப்பா. அதிலும் தகுதி பாராமல் அன்பு செய்யும் அப்பா. தகுதியற்றவர்களைத் தேடிச் செல்லும் அப்பா. "நீதிமான்களை அல்ல, பாவிகளையே தேடிவந்தேன்"?

அந்த அருட்பெருக்கின் முன் பாவங்கள் கரைந்தோடுகின்றன. 'பாவம் பெருகிய இடத்தில் அருள் அதைவிட அணை கடந்து பெருக்கெடுத்தது' என்கிறார் பவுல் அடியார்.

இந்த அன்பு அனுபவ மகிழ்ச்சியே நமக்கு நம் தன்னலங்களிலிருந்து விடுதலை தரும் ஆற்றல், ‘இறைமகிழ்ச்சியே என் ஆற்றல்’. தன்னலத்திலிருந்து விடுபட்டு நிற்பவன், பாவத்திலிருந்து விடுபட்டு நிற்பான்.

இந்த இறையனுபவம், நமக்கு உயிர் மூச்சு போல, எப்போது பிராண வாயு குறைகிறதோ, அப்போது சாவின் களை, தன்னலத்தின் களை, நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. ஆக இந்த இறையனுபவம் நமக்குத் தொடர்ந்து தேவை.

இதுவரை ஆழ்ந்து உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த நவீனன் இப்போது இடையிட்டார்: “நடுவில் இறைவன் நம்மைப் புரிந்துகொள்கிறவர் எண்ணீங்க.”

பணி. இனியன் : “நாம் நம்மையே புரிந்து கொள்வதில்லை. நம்மை உருவாக்கிய வெவ்வேறு அனுபவங்கள், இன்னும் நமக்குள்ளே இருக்கிற இழுபறிகள். இதனால் வருகிற நிர்பந்தங்கள், இவற்றை நாம் புரிந்து கொள்வதில்லை. ஆக நாம் நம் மீதே எரிச்சல் கொள்கிறோம். நம்மையே நாம் தீர்ப்பிடுகிறோம். ஆனால் நம்மைப் பற்றி நம்முடைய பின்னணிகள் பாதிப்புகள் நிர்பந்தங்கள் பற்றி அக்குவேறாக ஆணிவேறாக அறிந்து இருப்பவர் இறைவன். ஆக நாம் நம்மையே புரிந்துகொள்ளவில்லை என்றாலும் நம்மைப் புரிந்துகொள்கிறவர் அவர். அங்கீகரிக்கிறவர். அவரது அங்கீகாரத்தை உள்வாங்குகிறோம். அவருடைய அங்கீகாரப் பார்வையைப் பார்க்கும்போது நம்மையே நாம் அங்கீகரிக்கக் கற்றுக் கொள்கிறோம். பிறரையும், அவர்களுடைய சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, தீர்ப்பிடாமல், அன்பு செய்கிற, ஆற்றல் பெறுகிறோம்.

நாம் நம்மை அங்கீகரிக்காதபோது தாழ்வு மனப்பான்மை உருவாகிறது. இதைச் சரிசெய்ய வெவ்வேறு வகையான போட்டிகளில் வீம்புகளில் ஈடுபடுகிறோம். நம்மையே இப்படி நிரூபிக்கப் பார்க்கிறோம்.”

நவீனன் : “அதுசரி. ஆன்மீக அனுபவம் ஒன்று நிறைவாக இருக்கும் போது தன்னலப் போட்டிகள் தேவையில்லை.”

இனியன் தொடர்ந்தார் : “அந்த அனுபவம் நம்மை ஆட்கொள்ளும்போது, நீ வேறு நான் வேறு’ என்கிற கொண்டாட்டங்கள் மாறிவிடும். எல்லோரும் சகோதரர், எல்லோரும் சமம் என்கிற மனநிலைகள் உருவாகும். எல்லோரையும் வாழ வைத்தே ஆக வேண்டும் என்னும் தீவிரம் உண்டாகும், அது தான் இறையாட்சி அர்ப்பணம் என்பது”.

பணி. வெற்றியோன் இடையிட்டு சொன்னார்: “நிச்சயமாக!”

இறையாட்சி இங்கே இவ்வுலகில்

நவீனன் கேட்டார் : “இறையாட்சி அப்படீன்னா விண்ணரசு, அது விண்ணக வாழ்வு என்று விளக்கம் கொடுக்கிறாங்களே?”

“அது தப்பான விளக்கம்.” பணி.இனியன் தொடர்ந்தார்: “நாம் கர்த்தர் கற்பித்த செபத்தில் எப்படிச் செபிக்கிறோம்? ‘உமது அரசு வருக’ என்று. கடவுளுடைய அரசு, விண்ணகத்தில், மோட்சத்தில், வர வேண்டும் என்று நாம் செபிக்கத் தேவையில்லை.

அது அங்கே ஏற்கெனவே இருக்கிறது. அது வர வேண்டியது இங்கே, இவ்வுலகில்.

அவரது திருவுளம் அங்கே நிறைவேறுவது போல இங்கேயும் நிறைவேற வேண்டும்.

இறைவனுடைய திருவுளம் நிறைவேறுகிறது என்றால் இறையாட்சி வந்துவிட்டது என்று அர்த்தம்.

நவீனன் கேட்டார் : "இறையாட்சி என்றால் பிறருக்காக வாழ்வது என்கிறீர்கள். பிறருக்காக வாழ்வது என்றால் கையில் ஒன்றும் தங்காதே?"

பணி. இனியனுக்கு இந்தக் கேள்வி பிடித்திருந்தது. அந்த உற்சாகத்தோடு அவர் தொடர்ந்தார். "ஆகவே தான் இயேசு சொன்னார்: கடவுளுக்கும் பணத்துக்கும் ஒருசேர ஊழியம் செய்ய முடியாது. ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரன் கடவுள் அரசில் நுழைய முடியாது".

"கொஞ்சம் கடினம் தான்" - நவீனன்.

"வேறு வழியில்லை," இனியன் தொடர்ந்தார். "தன்னை மையப்படுத்தலுக்கும் பிறரை மையப்படுத்தலுக்கும் ஒருசேர ஊழியம் செய்ய முடியாது. அன்பை நம்புகிறவர்களின் ஆட்சியில் தன்னலவாதிக்கு இடம் இருக்க முடியாது. இறையாட்சிக்கும் பணப்போட்டிக்கும் உறவு ஏற்படுத்த முயல்வது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல".

நவீனன் : "ஆனால் அது நடைமுறைக்கு ஒத்து வராததா இருக்குதே?" இண்ணைக்கு, பணம் இல்லேன்னா ஒண்ணும் இல்ல. மதிப்பு இல்ல. சோறு இல்ல. வாழ்வு இல்ல. சரி, நீங்க திருமணம் பண்ணாம இருக்கீறீங்க. நீங்ககூட திருமணம் பண்ணி, நான்கு பெண்குழந்தைகளுக்கு அப்பாவா இருந்தா, நீங்க கூட பணம் சேர்ப்பீங்க. இல்லேன்னா நாளைக்கு ஓங்க பிள்ளைங்க தெருவிலே நிக்கணுமேன்னு ஓங்க அப்பா. இதயம் துடிக்கும்".

அமைப்புமுறைத் தடைகளும் இறையாட்சியும்

பணி. இனியன் : "தம்பி, நீங்க சொல்லுகிறது சரி. இன்றைய நடைமுறைகள் அதற்குத் தடையாக உள்ளன. வரதட்சணை, அப்படி ஒரு நடைமுறை. ஓர் அமைப்பு முறை. சமூக, பொருளாதார, கலாச்சார, அமைப்பு முறை. இது தடை. இம்மாதிரி தடையான அமைப்பு முறைகள் உடைத்தெறியப்பட வேண்டும். அதுவும், இறையாட்சி அர்ப்பணத்தின் ஓர் அம்சம்."

பணி. வெற்றியோன் : "அப்படியென்றால், இன்றைய அரசியல் முறையும் அமைப்பு ரீதியான ஒரு தடை. ஜனநாயகம் என்று ஆளும் போது, பணக்காரன்தான் "ஆள்" என்ற நிலை, மீதியுள்ளபவன் "சைபர்" என்று ஆகிவிடுகிறது. வெறும் சைபராக இருக்க யாருக்குத் தான் மனம் வரும்?"

பணி. இனியன் : "இன்றைய அரசியல் அமைப்பும் மாறியே ஆக வேண்டும்".

நவீனன் : "நடக்கிற காரியமா?"

பணி. இனியன் : "அவ்வளவு கடினம் அல்ல".

பணி. வெற்றியோன் : "என்ன?"

நவீனன் : "நம்ப முடியலியே?"

பணி. இனியன் : "கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள்."

"இன்றைக்கு அன்பியங்கள் வைத்திருக்கிறோம். இதில் கிறிஸ்தவர்கள் மட்டும் வருகிறார்கள். பங்குப் பேரவையோடு இணைந்து இவை செயல்படுகின்றன.

"இதேபோல, சுமார் முப்பது வீடுகளைக் கொண்டு, எல்லா மக்களையும், அதாவது மத வேறுபாடு பாராமல், உள்ளடக்கி,

'அக்கம்பக்கத்து பாராளுமன்றங்கள்' ஊரெங்கும் தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம்.

"ஒவ்வொரு அக்கம் பக்கத்துப் பாராளுமன்றத்திலும் ஒரு பிரதமர் மற்றும் அக்கம் பக்கத்து அளவிலான அமைச்சர்கள்.

"அக்கம் பக்கத்துப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஊர்ப் பாராளுமன்றமாக அல்லது வார்டு பாராளுமன்றமாக ஆக வேண்டும். அங்கும் அமைச்சர்கள்.

"அடுத்து, ஊர்ப் பாராளுமன்ற பிரதிநிதிகளைக் கொண்டு பஞ்சாயத்துப் பாராளுமனறம். இதேபோல ஒன்றியப் பாராளுமன்றங்கள், மாவட்டப் பாராளுமன்றங்கள், மாநிலப் பாராளுமன்றங்கள், தேசப் பாராளுமன்றங்கள், பன்னாட்டு பாராளுமன்றங்கள், கடைசியாக உலகப் பாராளுமன்றம் என அமைகிறது என்று வைத்துக் கொள்வோம்".

பணி. வெற்றியோன் : "பெரிதாகக் கனவு காண்கிறீர்கள்."

நவீனன் : "மிகத் துணிச்சலான கனவு".

பணி. இனியன் : "பொறுங்கள். சொல்லி முடிக்கவில்லை".

நவீனன் : "சொல்லுங்க."

புதிய மக்களாட்சி முறைகள்

பணி இனியன் : "இந்த பல்நிலைப்பட்ட பாராளுமன்ற இணைப்பைப் பற்றிய ஒரு கொள்கை அல்லது நெறி: எல்லாப் பாராளுமன்றங்களும் அளவில் சின்னதாக இருக்க வேண்டும். கீழ் மட்டத்தில், சுமார் முப்பது குடும்பங்கள். அதற்கு மேறபட்ட மட்டங்களில் முப்பது நபர்கள் இருந்தாலே போதும். அதாவது தேச, உலகப் பாராளுமன்றங்களில் கூட.

நவீனன் : "எதுக்காக?"

பணி. இனியன் : "பெரிய தொகுதிகளாக ஆகும்போது, பெரிய குரல்களே எடுபடுகின்றன. பணக் குரல்களே எடுபடுகின்றன. பேசும் தளங்கள், அவைதான் பாராளுமன்றங்கள், சின்னதாக ஆகும்போது சின்னக் குரல்களுக்கும் கவனம் கிடைக்கும். பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்".

நவீனன் : "வேறு கொள்கைகள்?"

பணி.இனியன் : "அடுத்த கொள்கை: நான் சொல்லுகிற பல்மட்டப் பாராளுமன்ற பின்னிப் பிணைப்பு எண்ணிக்கையில் ஒரே சீர்த்தன்மையானதாக இருக்க வேண்டும்".

நவீனன் : "அப்படீன்னா?"

பணி.இனியன் : "இன்றைக்கு இருக்கிறது மாதிரி பெரிய பஞ்சாயத்து சின்ன பஞ்சாயத்து, பெரிய மாவட்டம் சின்ன மாவட்டம், பெரிய நாடு சின்ன நாடு, இப்படியெல்லாம் இருக்கக்கூடாது. இத்தனை குடும்பங்கள் என்றால், அக்கம் பக்கத்துப் பாராளுமன்றம் அல்லது முதல் மட்டப் பாராளுமன்றம், இத்தனை முதல் மட்டப் பாராளுமன்றங்கள் இணைந்து இரண்டாம் மட்டப் பாராளுமன்றம், என எல்லாம் எண்ணிக்கை அடிப்படையில்".

பணி.வெற்றியோன் : "அப்படியென்றால், எல்லைப் போர்களுக்குத் தேவையில்லை".

பணி.இனியன் : "அடுத்த கொள்கை: அடிமட்ட முதன்மை".

நவீனன் : "புரியலையே!"

பணி.இனியன் : "எந்தக் கீழ்மட்டப் பாராளுமன்றமும் செயல்படுத்த முடிந்த ஒன்றை அதற்கு மேற்பட்ட எந்தப் பாராளுமன்றமும் எடுத்துச் செய்யக் கூடாது. மேல்மட்டங்களில்

உள்ள பாராளுமன்றங்கள், கீழ்மட்டப் பாராளுமன்றங்கள் தீர்மானிக்க முடியாதவை பற்றியே தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்".

பணி.வெற்றியோன் : "இது அதிகாரப் பரவலாக்க கருத்து".

பணி.இனியன் : "மிகச் சரி"

பணி.வெற்றியோன் : "இப்படியிருந்தால் பெரும்பாலான விசயங்கள் பற்றிய முடிவு அடிமட்டங்களிலேயே அடிமட்ட மக்களாலேயே எடுக்க வேண்டியிருக்கும். நாங்களும் மன்னர்கள் என்கிற உணர்வு அவர்களுக்கும் உருவாகும். சரி, அடுத்த கொள்கை?"

பணி இனியன் : "அது மிக முக்கியமானது: திருப்பி அழைக்கும் வாய்ப்பு. இன்று தேர்தலில் ஒருவர் வெற்றி பெற்று விட்டாரென்றால் அவரது செயல்பாடுகள் மக்களுக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் திருப்பி அழைக்க வாய்ப்பு இல்லை. கேட்டால் சொல்வார்கள், தேர்தல் எவ்வளவு பெரிய செலவு, ஒவ்வொரு நாளுமா அதை நடத்த முடியும், என்று, நம் புதிய கனவுபடி, ஒவ்வொரு மட்டத்திலும் பாராளுமன்றங்கள் மிகச் சிறியவை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரைப் பற்றி நிறைவு இல்லையென்றால் எந்த நேரமும் பாராளுமன்றத்தைக் கூட்டி ஒரு மட்டத்திலிருந்து இன்னொரு மட்டத்திற்கு, தேர்ந்தெடுத்தவரை திருப்பி அழைக்க முடியும்".

பணி.வெற்றியோன் : "அப்படியென்றால், அதிகாரச் சரடு தொடர்ந்து அடிமட்டத்தினர் கரங்களிலேயே இருக்கும்".

நவீனன் : “அடிமட்டத்திலுள்ளவங்க, பெரும்பாலானவங்க ஏழைங்க. அவங்க பிரச்சினைங்க தீரும். ஏழை, பணக்காரர் என்கிற நெலம கூட மாறும். அதுக்காகவும் சட்டங்கள் இயற்ற முடியும்”.

புதிய வானம் புதிய பூமி

பணி இனியன் : “தற்காலம், கொள்கைகளை இத்தோடு நிறுத்திக் கொள்வோம். இப்படியொரு புதிய அரசியலமைப்பு முறை வந்தால், உலகம் எப்படி இருக்கும் என்கிறீர்கள்?”

நவீனன் : “நீதி நிலவும், இலஞ்சம் இருக்காது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும்.”

பணி.வெற்றியோன் : “இறையாட்சி உலகமாக இருக்கும்.”

நவீனன் : “பூனைக்கு யார் மணி கட்டுவது? இதையெல்லாம் யார் செய்து முடிப்பது?”

பணி.இனியன் : “நாம் ஒவ்வொருவரும் தான். நாம் இருக்கும் அக்கம் பக்கங்களிலேயே அக்கம் பக்கத்துப் பாராளுமன்றங்களைத் தொடங்க வேண்டும்.

பணி.வெற்றியோன் : “தொடங்குகிறோம். ஆனால் அவை நிலைக்க வேண்டுமே”.

பணி.இனியன் : “நிலைக்க வைப்பது எளிது”.

நவீனன் : “எப்படி?”

பணி.இனியன் : “எந்த அமைப்பையும் நிலைக்கச் செய்ய வேண்டுமென்றால், அதற்கு நிறைய பணிகளை, பொறுப்புகளை, கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இணைந்து செயல்படுவதற்கான காரியங்கள் இருக்க வேண்டும்.

இணைந்து செயல்படும் போது, "நாம் ஓர் அமைப்பு" என்கிற தன்னினங்காணல் தன்மை, உருவாகிறது. யார் யார் உறுப்பினர், யார் யாரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்ற தெளிவு உண்டாகிறது."

பணி.வெற்றியோன் : "அன்பியங்களிடம் ஞாயிறு வழிபாட்டிற்கு முறை வைத்து தயாரிக்கச் சொன்னதால் அன்பியங்கள் வலுப்படுவது போல".

பணி.இனியன் : "மிகச் சரி, இதே போல் அக்கம் பக்கத்துப் பாராளுமன்றங்கள் என்று வரும்போதும், மிகப் பல காரியங்களை அவர்களே செய்ய வேண்டும். அதாவது சேமிப்பு, கடன், வங்கி, விற்பனை, வருவாய், உற்பத்தி, உடல்நலம், சுற்றுச்சூழல் சார்ந்த முயற்சிகள், மனித உரிமைச் செயல்பாடுகள் எல்லாமே இந்த அக்கம் பக்கத்துப் பாராளுமன்றங்கள் வழியாகவே நடைபெற வேண்டும்".

பணி.வெற்றியோன் : "சுய உதவிக் குழுக்களையே அக்கம் பக்கத்து பாராளுமன்றங்கள் வழியாக நடத்த வேண்டும் என்கிறீர்கள்?"

பணி.இனியன் : "கேரளாவில் அப்படித்தான் நடக்கிறது. அங்கே "அயல்கூட்டம்" அதற்குள்ளே "வனிதா அயல் கூட்டம்" அதாவது 'பெண்கள் அண்டைக் குழு' அல்லது சுய உதவிக்குழு. இங்கே தமிழகத்தில் என்றால் ஒரே ஊருக்குள்ளேயே பல குழுக்கள் நுழைந்து ஆளாளுக்கு சுய உதவிக் குழு தொடங்கி, ஏற்கனவே இருக்கிற இணைப்புப் பலத்தைக் கூட துண்டுபடுத்துகிறார்கள்.

நவீனன் : "புதிய அமைப்பு வந்தால், குடும்பங்கள், தங்களைப் பற்றி கவலை கொள்ளாமல், அடுத்தவங்களைப் பற்றி நினைக்கிற மனுசங்களை உருவாக்க முடியும்".

புதுவகை கூட்டுக் குடும்பங்கள்

பணி.இனியன் : "இன்னும் ஓர் அம்சம் இருக்கிறது. இன்றைக்கு முன்பு மாதிரி கூட்டுக் குடும்பம் இல்லை. தனித்தனிக் குடும்பங்களாக வாழ வேண்டிய நிலை.

இதுபற்றி ஜப்பானிய பெண் எழுத்தாளர் ஒருவர் - இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர் - குறிப்பிடும்போது இப்படிச் சொன்னார்: 'இந்தத் தனிக் குடும்பங்கள் தங்கள் உறவு வாழ்வில் ஏற்படும் சவால்களை, அதிர்ச்சிகளை, தாக்குப்பிடிக்க முடியாமல் திணறுகின்றன, உடைகின்றன. முற்காலத்தில் கூட்டுக் குடும்பங்கள் என்று இருந்தபோது இருந்த "தாங்குதல்" இவர்களுக்கு இல்லை'.

அவர் தொடர்ந்து விளக்குகிறார்: 'முன்னர் இருந்தது போன்ற அதே வகையான கூட்டுக் குடும்பங்கள் இனி முடியாததுதான். ஏனென்றால் தொழில் போன்ற பல்வேறு காரணங்களால் மக்கள் தங்கள் உறவினர்களை விட்டு தொலைவில் இருக்க வேண்டியிருக்கிறது. இவர்களுக்குப் புதிய வகையான கூட்டுக் குடும்பங்கள் தேவைப்படுகிறது.'

இதேபோல இன்னொரு ஆய்வு. ஹாங்காங்கிலே கடலிலிருந்து சில இடங்களை மீட்டு அங்கே குடும்பங்களைத் தங்க வைத்தார்கள். இவர்களுக்கு முன்னர் இருந்த உறவினர்கள் உடனிருப்பு, கூட்டுக்குடும்ப உடனிருப்பு, இல்லை. இவர்களிடையே விவாகரத்து அதிகமாக இருந்தது.

ஆக பழைய கூட்டுக் குடும்ப பலத்தை இன்னொரு வகையில் மீண்டும் அமைக்க நம் அன்பியங்கள் மற்றும் அக்கம் பக்கத்துப் பாராளுமன்றங்கள் மிகவே உதவும்.

நவீனன் : "மொத்தமாக சொல்றதுன்னா, உலகத்தைத் திருத்த உழைக்காதவன் நிறைவான குடும்ப வாழ்க்கை வாழ முடியாது என்கிறீங்க".

பணி.இனியன் : "ஆமாம், சமுதாயத்தை மாற்ற முயலாதவன், நிறைவான ஆன்மீக அனுபவம், நிறைவான தெய்வீக மகிழ்ச்சி அனுபவம் பெறவும் முடியாது".

குடும்பத் தலைவர்களுக்கான புரட்சிப் பார்வைகள்

நவீனன் : "இப்படியெல்லாம் பேசுறீங்க. நீங்க வழிபாடு நடத்தும்போது, எடுத்துக்காட்டாக, கல்யாண நிகழ்ச்சிக்கு வர்றவங்க, ஆளுக்கு ஆள் ஒரு நடமாடும் நகைக்கடை மாதிரி வர்றாங்க. இதையெல்லாம் பார்க்கும்போது உங்களுக்கு எப்படி இருக்கும்."

பணி.இனியன் : "குமட்டல் வரும். குமுறல் வரும். இயேசு சாட்டையெடுத்து விரட்டியது போல அடித்துவிரட்ட வேண்டும் என்று தோன்றும். அன்பு, சகோதரத்துவம் மற்றும் சமத்துவம் வெளிப்பட வேண்டிய இடத்தை இவர்கள் பணக்காரர்கள் குகையாக, டாம்பீகப் போட்டிகளின் 'ஷோ ரூம்' போல, மாற்றுகிறார்கள்.

நவீனன் : "அப்படியானால், சில வசதி படைத்தவர்களின் திருமணங்களுக்கு இருபது முப்பது நாற்பது குருக்கள் ஆடம்பரமாக வந்து கூட்டுப்பலி நிறைவேற்றுவதையும் நீங்க வெறுப்பீங்க".

பணி.வெற்றியோன் : "ஒரு மறைமாவட்டத்தில் இறைமக்கள் பேரவையின் போது இதுபற்றி ஒரு தீர்மானமே போட்டிருக்கிறார்கள். அதாவது எந்தத் திருமணத்திற்கும் மூன்று குருக்களுக்கு மேல் பீடத்தில் நின்று கூட்டுப்பலி செய்யக்கூடாது என்று. ஆனால் இதற்கு எதிர்ப்பும் இருக்கிறது. குருக்கள் தங்கள் குருத்துவத்தின் ஒற்றுமையை கூட்டுப்பலியால் கொண்டாட வேண்டாமா என்று?"

பணி.இனியன் : "நமக்குத் திருவழிபாடு அடையாள ரீதியான ஒரு கொண்டாட்டம். இந்த அடையாளங்களுக்கும் போதிக்கும் தன்மை உண்டு. அதாவது Didactic value என்பார்கள். நாம் வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நடத்தும் முறை, இயேசுவின் தன்னைத் தருதலை, பகிர்தலை, கொண்டாடுவதைச் சுட்ட வேண்டுமே தவிர இயேசு விரும்பாத ஒன்றை, ஏற்றத்தாழ்வுகளை, கொண்டாடுவதாக ஒரு தோற்றத்தை, அடையாளத்தை, கொடுக்கக்கூடாது. அதற்கென்று சில தியாகங்களைச் செய்வது போற்றத்தக்கது."

நவீனன் : "ஏதோ திருமண மந்திர பாடம் என்று வந்தேன். என்னை ஒரு புரட்சிவாதியாக மாற்றிவிட்டீர்கள். சரி. அடுத்து என்ன மறைக்கல்வி கேள்விகளைக் கேட்கப் போகிறீர்கள்?"

பணி.இனியன் : "கிறிஸ்துவின் புரட்சிப் பார்வையைப் பெற்றுவிட்டாய். உன்னிடம் வேறு எந்த மறைக்கல்வி கேள்விகளும் கேட்கத் தேவையில்லை. திருச்சபை எந்தப் புரட்சியை முன்னின்று நடத்த வேண்டுமோ, அதற்கான சீடத்துவ தயாரிப்புத் தளமாக, ஒரு குட்டித் திருச்சபையாக உன் குடும்பம் விளங்கும். எங்கே நீ நிரப்பிய திருமணப் படிவம்?"

பணி.இனியன் படிவத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

பணி.வெற்றியோன் : (சிரித்துக்கொண்டு) "சுயநலப் போட்டிகளை நீங்கள் கோயிலிலிருந்து விரட்டுவது இருக்கட்டும். ஒவ்வொரு திருமணத் தயாரிப்புக்கும் இவ்வளவு கேள்வி கேட்டால் இனி உங்களையும் விரட்டி விடுவார்கள்.

பணி இனியன், சிரித்துக்கொண்டே, படிவத்தில் கையொப்பமிட்டு, "அதுதான் சிலுவை சுமத்தல்" என்கிறார். நவீனனை வழியனுப்பி வைக்கிறார்.

நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். ✆ : 233853

எழுதியவர், பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் இறையியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர். கிழக்கு ஆசிய மேய்ப்புப் பணி நிறுவனத்தில் (East Asian Pastoral Insitute) பயிற்சி பெற்று, தெற்கு ஆசிய சமயச் செய்தி நிறுவனத்தின் (South Asian Religious News) இயக்குநராகவும், பிறகு 'ஹெல்த் ஆக்ஷன்' (Health Action) பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். தமிழ் நாட்டில் அன்பியம் வளர முன்னோடியாகச் செயல்பட்டவர். தற்பொழுது அன்பியம் போன்ற பலசமய அமைப்புகளை 'அக்கம் பக்கத்து பாராளுமன்றங்கள்' என்ற பெயரில் உருவாக்கி மக்களுக்கு சமுதாய வளர்ச்சிக்குரிய விழிப்பு ஊட்டும் பணியைச் செய்கிறார். இதன் ஓர் அங்கமாக விளங்கும் 'குழந்தைகள் பாராளுமன்றம்' பற்றி ஐக்கிய நாடுகள் சபையில் (U.N.O) இருமுறை உரையாற்றியவர்.

இது, "இறையாட்சியின் சிற்பிகள்" என்னும் தலைப்பில் அருட்பணி த.விக்டர் வெளியிட்ட தொகுப்பு நூலில் வந்த ஒரு கட்டுரை.

தொகுப்பு நூல் கிடைக்குமிடம்:
சிற்பி வெளியீடுகள், ஆர்.சி. மிஷன், இலங்குளம் 627 110.